செ.வெ.எண். 30 நாள்: 14.08.2019

**கிருஷ்ணகிரி ஒன்றியம் நாரலப்பள்ளி ஊராட்சி வீரப்பன் ஏரியில், நீர் மேலாண்மை திட்டத்தின் கீழ் குடிமராமத்து மற்றும் துார் வாரும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் இன்று ( 14.08.2019 ) துவக்கி வைத்தார்.**

கிருஷ்ணகிரி ஒன்றியம் நாரலப்பள்ளி ஊராட்சியில் சுமார் 3- ஏக்கர் பரப்பளவு கொண்ட வீரப்பன் ஏரியில் ரூ. 5 - லட்சம் மதிப்பில், ஊரக பகுதிகளில் உள்ள நீர் நிலைகளில், குடிமராமத்து மற்றும் துார் வாரும் பணிகள் திட்டத்தின் கீழ், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் இன்று ( 14.08.2019 ) துவக்கி வைத்தார்.

**பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கும் போது:**

நமது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நீர் மேலாண்மைத் திட்டம் ( ஜெல்சக்தி அபியான்) திட்டத்தின் கீழ் ஏரிகள், குளங்கள் மற்றும் நீர் நிலைகளை துார்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதேப்போல ஊரக பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில், குடிமராமத்து மற்றும் துார் வாரும் பணிகள் தற்போது துவங்கப்பட்டுள்ளது. வடக்கிழக்கு பருவ மழை எதிர் நோக்கி உள்ள நிலையில் நீர் நிலைகளில் மழை நீரை சேமிக்கும் பொருட்டு அரசு மற்றும், தொழில் நிறுவனங்கள், பல்வேறு அமைப்புகள் மூலம் மாவட்டம் முழுவதும் 150 ___ க்கும் மேற்பட்ட ஏரிகளில் துார் வாரும் பணிகளும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக 10- ஒன்றியத்தில் தலா 10 ஏரிகள் என 100 ஏரிகள் துார் வாரப்படுகிறது. இப்பணிகள் முழு வீச்சில் தொடங்கப்பட்டு ஏரி கரைகள் உயர்த்தியும், தாழ்வான பகுதிகளை கண்டறிந்து அதிக அளவில் மழை நீரை சேமிக்கவும், குளம் குட்டைகள் மற்றும் ஏரிகளுக்கு வரும் நீர் வரத்து கால்வாய்கள் துார் வாரும் பணிகள் நடைபெறுகிறது.

கிருஷ்ணகிரி ஒன்றியம் நாரலப்பள்ளி ஊராட்சியில் சுமார் 3- ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட , வீரப்பன் ஏரியில் ரூ. 5 -லட்சம் மதிப்பில், (2019 -2020) ம் நிதியாண்டில் ஊரக பகுதிகளில் உள்ள நீர் ஆதாரங்களை குடிமராமத்து மற்றும் துார் வாரும் பணிகள் இன்று துவக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிகளை தரமாகவும், மழைநீர் சேமிக்கும் பொருட்டு கரைகளை உயர்த்தியும், நீர் வரத்து கால்வாய்கள், நீர் வெளியேறும் பகுதிகளை நல்ல முறையில் துார் வாரி பணிகளை முடிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு மற்றும் நீர் நிலைகள் துார் வாரும் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசும்பொழுது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்திரவின் படி ஏரி குளங்கள் துார் வாரி மழை நீர் சேகரிக்கும் வகையில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. தொண்டு நிறுவனங்கள், இந்திய மருத்துவ சங்கம், நேருயுகேந்திரா, மகளிர் சுய உதவிக்குழுவினர் ஆகியோர் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி முழு ஒத்துழைப்போது மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதேப்போல கேந்திர கே.வி.கே. அமைப்பு மூலம் விசாயிகளிடையே மழைநீர் சேகரிப்பு மற்றும் பண்ணை குட்டைகள் ஏற்படுத்த விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும். ஊரக பகுதியில் உள்ள பயன்படாமல் உள்ள கிணறுகளை துார்வார அனுமதி வழங்கி பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசினார்

இதில் தொண்டு நிறுவனங்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர், இந்திய மருத்துவ சங்கம், தனியார் மருத்துவமணை பிரதிநிதிகள், கலந்துக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வாழ்வாதார திட்ட அலுவலர் திருமதி.உமாமகேஸ்வரி, ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திரு. ஆறுமுகம், உதவிசெயற்பொறியாளர் திரு.பாபு, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.சரவணபவா, திரு.பிரசன்னவெங்கடேசன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.சேகர், ஒன்றிய பொறியாளர் திரு.ஆசைதம்பி, பணி மேற்பார்வையாளர் திரு.முருகன், மற்றும் விவசாய பெருமக்கள், கலந்துக்கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.